உ
சிவமயம்

Registered as a N
paper n eylon
P. M. G. NO. H. A.
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமான

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானு௵ ஆடிமீ ௩௨ (1943 ஆகஸ்ட்மீ 2 திங்கட்கிழமை) [இல. ௩௩

## இந்தியத் துருப்புகளின் தொண்டிற்கு நன்றி

### 'இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுப்பதுதான்'

அலகபாத் யூலை 25—

'இந்திய யுத்தவீரரை அநாவசியமாகப் புகழ வேண்டியதில்லை. ஆனால், அவர்களுக்குரித்தான புகழை இந்திய அரசாங்கத்தார் குறைத்திருக்கின்றனர். இந்தியாவில் திறமையாகத் தேசிய இராணுவம் ஏற்படுத்த முடியுமென்பதை வட ஆபிரிக்காவில் வெற்றிக் கொடியை நாட்டிய இந்தியத் துருப்புகள் எடுத்துக் காட்டி விட்டன என்று டாக்டர் ஹிருதயநாத குன்ஸ்ரு இன்று பத்திரிகை நிருபர்களின் கூட்டத்தில குறிப்பிட்டார். மத்திய கிழக்குப் பிரதேசத்திலுள்ள இந்திய துருப்புகளைப் பார்வையிட்டுச் சமீபத்தில்தான் இந்தியாவுக்குத் திரும்பியிருக்கிறார்.

அரசியலில் நன்றி செலுத்த இடமுண்டெனில, இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுத்து இந்திய துருப்புகளின் தொண்டிற்கு நன்றி செலுத்திக்கொள்ள வேண்டுமென்று டாக்டர் குன்ஸ்ரு கூறினார்.

## கத்தியாற் குத்திக் கொலை செய்ததாக வழக்கு

### ஊர்காவற்றுறை வாசிமீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜுலை 28.

யாழ்ப்பாணம் சுப்பிறீங் கோட்டில் நீதிபதி மிஸ்டர். ஜீ. பி ஜெயதிலகா அவர்கள் முன்பாகவும், ஆங்கிலம் பேசும் ஜூரிக் கனவான்கள் முன்பாகவும், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த புங்குடுதீவு கிழக்கு வாசியாகிய ஆறுமுகம் அம்பலவாணர் என்பவர் மீது அவ்வூர் வாசியாகிய சிதம்பரநாதர் கதிரவேலு என்பவரைச் சென்ற சித்திரைமீ 22-ந் தேதி ஏளவிற் கூரிய ஆயுதத்தினாற் குத்தி அவருக்கு மரணம் விளைவித்ததாகவும் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது.

முதலாவதாக, டாக்டர் ஸி. ஏ. ஆனந்தம் அவர்கள் சாட்சியங் கூறுகையில், காயமடைந்தவர்மீது நாலு காயங்கள் காணப்பட்டதாகவும், அவற்றுள் 3 காயங்கள் கல்லினால் ஏற்பட்டதென்றும், 4-வது காயம் விலலுக் கத்தியால் உண்டாகியதென்றும், கத்திக் காயமே மரணத்தை உண்டாக்கியதாகவும் குறிப்பிட்டார். விசாரணை நடைபெறுகிறது.

## பூநகரிப் பாலத்தின் ஒரு பகுதி பூர்த்தியாயிற்று

12000 அடி நீளமுள்ள பூநகரிப் பாலத்தில் ஒரு பகுதி பூர்த்தியாகி விட்டது. பூர்த்தியான பகுதியின் நீளம் 4000 அடியாகும். மற்றப் பகுதியைப் பூர்த்தி செய்யும் பொருட்டு ஏறக்குறைய 400 தொழிலாளர் இப்பொழுது வேலைசெய்து வருகின்றனர்.

# பாஸிஸ்ட் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்

## ஹம்பர்க்மீது மீண்டும் குண்டு வீச்சு

லண்டன் யூலை

இத்தாலியில் எல்லாப் பாஸிஸ்ட் கட்சித் தலைவர்களும் பாஸிஸ்ட் கிராண்டு கௌன்சில் அங்கத்தினர்களில் ஒருவரைத்தவிர, மற்ற யாவரும் கைது செய்யப்பட்டிருப்பதாக ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது.

பாஸிஸ்ட் கௌன்சில் அங்கத்தினர்களிற் கைது செய்யப்படாமல் இருப்பவர்களின் பெயரை ஜெர்மன் செய்திஸ்தாபனம் அறிவிக்கவில்லை.

ஹம்பர்க்மீது மீண்டும் குண்டுவீச்சு

ஏராளமான பிரிட்டிஷ் விமானங்கள் ஹம்பர்க் துறைமுகத்தை நேற்றிரவு தாக்கினவென்று உத்தியோக முறையில் அறிவிக்கப்படுகிறது.

ஹொலந்திலுள்ள சத்துருவிமான நிலையங்களை அமெரிக்க எட்டாவது விமானப்படையைச் சேர்ந்த மத்தியமாக வெடிகுண்டு விமானங்கள் இன்றுகாலை தாக்கினவென்று அறிவிக்கப்படுகிறது.

ஹம்பர்க்மீது நேற்றிரவு நடைபெற்ற பிரிட்டிஷ் விமானத்தாக்குதலாற் பெருஞ்சேதம் ஏற்பட்டதாக ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது. இன்றுவெளியான பிரிட்டிஷ் விமானப்படைக் காரியாலய அறிக்கையொன்று கூறுவதாவது:- ஏராளமான வெடிகுண்டு விமானங்கள் ஹம்பர்க் துறைமுகத்தைத் தாக்கின. பலத்த சத்துரு எதிர்ப்பு இருந்தும் நமது விமானங்கள் ஹம்பர்க்கைப் பலமாகத் தாக்கின. மூன்று சத்துரு போர் விமானங்கள் அழிக்கப்பட்டன. ஜெர்மனி பிரான்ஸ் ஆகிய இடங்களிலுள்ள சத்துரு விமான நிலையங்களும் தாக்குண்டன. நமது விமானங்களில் 28 திரும்பவில்லை.

மத்திய கிழக்கு விமானப்படை அறிக்கையொன்று கூறுவதாவது: ரோட்சிற்கருகிலுள்ள அலிம்னியா தீவிலுள்ள துறைமுகமொன்றில இருந்த அச்சுக்கப்பல்களை பிரிட்டிஷ் வெலிங்டன் வெடிகுண்டு விமானங்கள் புதன்கிழமையன்றிரவு தாக்கின. ஒரு சத்துரு வியாபாரக்கப்பல் தீப்பிடித்தது. பாரஸ் தீவிற்கருகில் ஐந்து அச்சுப்படகுகளை பேசப் போர் விமானங்கள் நேற்றுத் தாக்கின. எல்லாப் படகுகளும் சேதமடைந்தன. நமது விமானங்கள் அனைத்தும் பத்திரமாகத் திரும்பின.

## யாத்திரை சென்ற 'ஜூரர்'

### சுப்பிறீம்கோட்டில் எச்சரிக்கப்பட்டார்

யாழ்ப்பாணம் யூலை 29

இம்மாதம 5ந் தேதி யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில ஆஜராகும்படி கோரிச் சமமன்ஸ் பிறப்பிக்கப்பட்டிருந்தும் ஊர்காவற்றுறையிலுள்ள சரவணையைச் சேர்ந்த திரு. வி. சோமசுந்தரம் என்னும் காணியாளர் கோட்டில் ஆஜராகத் தவறியதன் விளைவாக அவர்மீது நீதிபதி மிஸ்டர். ஜயதிலகா கட்டளை பிறப்பித்தார். அதன்பேரில திரு. சோமசுந்தரம் கோட்டில் ஆஜரானார்.

கோட்டை அவமதித்ததற்காக ஏன் தண்டனை விதிக்கக்கூடாதென்று காரணங் காட்டும்படி நீதிபதி திரு. சரவணமுத்துவைக் கேட்டார். அதற்குத திரு. சரவணமுத்து பதிலளித்ததாவது:—

நான் அறியாமையாற் செய்த பிழையை மன்னிக்கவும். நான் தீவுப்பகுதியில் வசித்துவருகிறேன். நேர்த்திக்கடனொன்றை நிறைவேற்றும்பொருட்டு நான் தென்னிந்தியாவிலுள்ள சிதம்பரத்துக்குப் போகவேண்டியிருந்தமையால், எனக்குச் சம்மன்ஸ் வழங்கப்பட்டபொழுது என் விஷயத்தில் விதிவிலக்கு அனுமதிக்கும்படி சுப்றீமகோட்டுக்கு விண்ணப்பித்திருந்தேன். யூன மாதம் 30ந் தேதிவரை எனக்குப் பதில் கிடைக்காமையால் எனது விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டதாக நினைத்துக் கொண்டு நான் தென்னிந்தியா சென்றேன்.

ஒவ்வொரு ஜூரரும் இப்படி நடந்துகொள்ளத் தீர்மானித்தால் கோட்டுவேலை தடைபடுமென்று நீதிபதி குறிப்பிட்டார்.

அதற்குத் திரு. சோமசுந்தரம் பதிலளிக்கையில், கோட்டை அவமதிக்க வேண்டுமென்ற எண்ணம் தமக்கில்லையென்று தெரிவித்து இங்கிலைமையில் தம்மை மன்னிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

நீதிபதி திரு. சோமசுந்தரத்தைப் பலமாக எச்சரித்து விடுதலை செய்தார்.

## புத்தளத்துக்கு 9 தேர்தல் தொகுதிகள்

புத்தளம் யூலை 29

புத்தளம் பட்டின சபையின் மாதாந்தக்கூட்டம்நடைபெற்றபொழுது பட்டினம் ஒன்பது தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அதன்பின்னர், அரசாங்கசபையின் புத்தளப் பிரதிநிதியான காலஞ்சென்ற மிஸ்டர். ஜே. எச். இலங்கைத்திலகாவின் மரணத்தைக்குறித்து அனுதாபம் தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பிள்ளை தாய் பொறுப்பில் விடப்பட்டது

யாழ்ப்பாணம்டிஸ்திறிக் நீதிபதிகளுளொருவராகிய மிஸ்டர். L. W. டீ. ஸில்வாவின்மீது, அவருடைய நான்கு வயசுப் பிராயமுடைய பிள்ளை தாய் பொறுப்பிலோ தகப்பன் பொறுப்பிலோ இருக்க வேண்டும் என்னும் விஷயமாக மேற்படி நீதிபதியின் மனைவி தொடர்ந்த வழக்கில், கலியாணத் தள்ளும் வழக்குக்கு ஒரு முடிவு வருமளவரை பிள்ளை தாய் பொறுப்பிலேயே இருக்க வேண்டுமென்றும், அப்பிள்ளையின் தாபரிப்பின் பொருட்டுத் தகப்பன் மாசம் 50 ரூபா செலவுகட்ட வேண்டுமென்றும், தகப்பன் விரும்பியபோதெல்லாம் முறைப்படி தன் பிள்ளையைப் போய்ப் பார்த்து வரலாகுமென்றும் மனைவி இவ்விஷயமாகத் தொடர்ந்த வழக்குச்செலவைப் புருஷனே கட்டவேண்டுமென்றும், தகப்பன் விரும்பினால் பிள்ளையைக் கொழும்புப் பிரிவில் ஒரு குறித்தகாலத்துள் தம்முடன கொண்டுபோய் வைத்திருந்து விட்டுப் பிறகு தாயிடம் கொண்டு வந்து ஒப்புவிக்கவேண்டுமென்றுந் தீர்ப்புச்செய்யப்பட்டது.

## நுவரெலியாத் தொகுதிக்கு 4 பேர் போட்டி

### வெள்ளை வர்ணத்தை விரும்பிய இரு அபேட்சகர்

நுவரெலியா, யூலை,30—

லஞ்சக் கொமிஷனரின் தீர்ப்பின் விளைவாக மிஸ்டர். ஈ. டபிள்யூ. அபயகுணசேகரா அரசாங்க சபையில் தமது பதவியை ராஜிநாமாச்செய்துவிட்டபடியால் காலியாயிருக்கும் நுவரெலியா ஸ்தானத்துக்கு ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்கான உபதேர்தலை போட்டி இன்று நுவரெலியாக் கச்சேரியில் நான்கு அபேட்சகர்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர்.

நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தவர்களின் விபரம் பின்வருமாறு:

மிஸ்டர். டி. பி. பெடவிலை (வெள்ளை)
மிஸ்டர். கே. பி. அளவத்துகொடை (சிவப்பு)
மிஸ்டர். ஜே. டி. ரத்னம் (மஞ்சள்)
மிஸ்டர். எம். டி. பண்டா (பச்சை)

மிஸ்டர். பண்டாவின் சார்பாக மிஸ்டர். பெடெவிலை தேர்தலிற் போட்டியிடுவதை மிஸ்டர். ஸ்ரீபால சமரக்கொடி ஆட்சேபித்தார், எனினும் குறித்த ஆட்சேபனை அனுமதிக்கப்படவில்லை. மிஸ்டர். அளவத்துகொடையின் ஜீவனத்தொழில் குறிப்பிடப்படவில்லை என்னும் ஆட்சேபனையை ஒரு வாக்காளர் கிளப்பினார். இதுவும் அனுமதிக்கப்படவில்லை.

வர்ணத்தைத் தெரிவு செய்யும் விஷயத்தில் மிஸ்டர். பெடெவிலையும் மிஸ்டர். பண்டாவும் வெள்ளை வர்ணத்தையே விரும்பியதால் ஒரு நாணயத்தை வீசியதில் மிஸ்டர். பெடவிலைக்கு வெற்றி கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானு௵
ஆடி௴ கஎ௳ திங்கட்கிழமை

## உணவுப் பொருள் விருத்தி

சென்றவாரம் மிஸ்ரர். சனநாயக, பரிபாலனத் திட்ட விஷயமாகப் பேசும்போது இப்பொழுது அரசினர் செய்யும் உணவுப் பொருள் முயற்சியையிட்டுப் பெரிதும் பாராட்டிப் பேசியுள்ளார்; இலங்கையிலே அரசினர் பல்லாற்றானும் செய்து வரும் உணவுப் பொருள் விருத்தி முயற்சிகள் பயனடைந்து வருகின்றனவென்பதே மிஸ்ரர். சனநாயக அன்று அரசாங்க சபையிற் செய்த பிரசாரணமாகும். ஆனல் மத்திய விவசாய சங்கத்தார் 2,38,606 ஏக்கர் பரப்புக் கொண்ட நிலம் சென்ற ஆண்டில் மேலதிகமாகப் பண்படுத்திப் பயிரிடப்பட்டதெனத் தெரிவித்துள்ளார்கள். இப்படியான பயிரிடுந் தொழின் முயற்சியால் வந்த பயன் எவ்வளவென்பதைச் சொல்ல முடியவில்லை யென்று விவசாயப் பகுதித் தலைமை உத்தியோகத்தர் தெரிவிக்கின்றார். பெருந் தொகையான பணஞ் செலவிட்டு மேலதிகமான ஏக்கர் கொண்ட நிலமும் பண்படுத்திப் பயிரிடப்பட்டு விளைந்தும் விட்டது. ஆனல் விளைந்த தானியம் எவ்வளவு, அது செலவானவழி எது அதனாற் சனங்கள் அடைந்த பயன என்ன என்ற இந்த விபரங்களை மேற்படி விவசாயப் பகுதி அதிகாரிதாமுஞ் சொல்ல முடியாதவராயிருக்கின்றாராம்; நிலைமை இப்படியிருந்தால், ஊர்ச் சனங்கள் இவர்கள்மேற் சந்தேகப்படுதல் பிழையல்லவென்று சொல்லலாம்; விவசாயத் தொழிலை நன்கு உணர்ந்தவர்கள், மேற்படி அதிகாரிகள் உணவுப் பொருள் விருத்தியின் பொருட்டுக் கையாண்ட முறைகள் சரியானவை யல்லவெனச் சந்தேகப்படுகின்றார்கள்.

இனி, பரிபாலனச் செலவு வருவாய்க் கணக்குப் பரிசோதகராயுள்ளவர் தமது 1941—1942-ம் வருட அறிக்கைப் பத்திரத்தில் உணவுப் பொருள் விஷயமாக 45,29,806 ரூபா செலவிடப்பட்டதாகவும், ஆனல் இப் பெருந் தொகைப் பணத்தைச் செலவிட்டதனல் அடைந்த பயன் எவ்வளவென்பது குறிக்கப்படவில்லை யென்றுந் தெரிவிக்கின்றார். இது யாரைப் பொறுத்த பிழையென்பது ஒரு அளவிற்குச் சொல்லாமலே விளங்கும்.

இலங்கை மக்களுக்கு இப்பொழுது இன்றியமையாது வேண்டப்படுவன உணவுப் பொருளும் உடைப் பொருளுமாகும். இந்தியாவிலிருந்தாக, பர்மா முதலிய வெளிநாடுகளிலிருந்தாக இப்போதைக்கு இலங்கை மக்கள் பொருட்டு அரிசி வருமெனக் காத்திருத்தல் வீண். மேலும், இந்தியாவிலிருந்து இங்கு அனுப்பப்பட்ட நெல் செங்கற் கட்டியோடும் புல்லோடும் மண்ணோடுங் கூடியதாகக் காணப்படுகிறது என்று அரசாங்கக் கணக்குப் பரிசோதகர் தமது வருடாந்த அறிக்கைப் பத்திரத்திலே தெரிவித்திருக்கின்றார்; இங்கு வரும் அரிசியும் மேலே சொல்லப்பட்ட நிலைமையோடு கூடியதாகும். வரத்தரிசி நெல் இப்படி யிருக்கும் நிலைமையில் இலங்கை யதிகாரிகள் இந்த இலங்கை நாட்டிலே உணபுப் பொருள்களை விருத்தி பண்ணும் விஷயத்திலே மிகவும் ஊக்கமாகவும் சிக்கனமாகவுமன்றோ கருமம் பார்க்க வேண்டும்.

## புங்குடுதீவுக் கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம் யூலை 29

யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் நீதியாசர் மிஸ்றர். ஈ. ஜீ. பி. ஜெயத்திலகா கே. சி. அவர்களதும் ஆங்கிலம் பேசும் ஜூரிக்கனவான்களதும் முன்பாக புங்குடுதீவு கிழக்குவாசியாகிய சிதம்பரநாதர் கதிரவேலு என்பவரைச் சென்ற சித்திரை மாதம் 22ந் தேதி யளவில் கூரிய ஆயுதத்தினல் குத்தி அவருக்கு மரணத்தை உண்டாக்கியதாக அவ்வூர்வாசியாகிய ஆறுமுகம் அம்பலவாணர்மீது தொடரப்பட்ட வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்காளியின் சார்பாக முடிக்குரிய நியாயவாதி மிஸ்றர். விஜயமானுவும் எதிரியின்சார்பாக நியாயவாதிகள் மிஸ்றர். ஜோசெப்பும் மிஸ்றர். தம்பித்துரையும் விவாதித்தார்கள்.

அப்போது விஞசித்தம்பி குமாரசாமி கூறிய சாட்சியத்தின் சாராம்சம் வருமாறு:—

நான் காலஞ்சென்றவரின் மாமன். அவர் மனைவி செல்லம்மா வீட்டில் சென்ற நான்கு ஐந்து வருட காலமாகச் சாப்பிட்டு வந்தேன். சம்பவம் நடைபெற்ற அன்று மத்தியானம் நான் சாப்பிட்டுவிட்டுத் திண்ணையில் இருந்து சுருட்டுப் புகைத்துக்கொண்டிருந்தேன். எனக்குப் பக்கத்திலிருந்த காலஞ்சென்றவர் எழுந்து வெளியே சென்றதை நான் கவனிக்கவில்லை. சிறிது நேரஞ் சென்ற பின்னர்க் கட்டப்படாது கட்டுவேன் என இருவர் எமது வளவுக்கு அப்பால் சப்தமிட்டதைக் கேள்விப்பட்டேன். அச்சத்தங்கள் எதிரியினதும் காலஞ்சென்றவரதும் என்பதைத் தெரிந்துகொண்டேன். உடனே நான் வெளியே போய்ப் பார்த்தேன். அப்போது வரகு வயலில் வெட்டிய பக்கத்தில் இருவரும் நின்றார்கள். எதிரி காலஞ்சென்றவருக்குக் கல்லால் தலையிற் குத்தினர். வரகு வயலுக்கும் நெல வயலுக்கு மிடையேயுள்ள வழிப் பாதைபாக[illegible]

தொடர்ச்சி ௫-ம பக்கம்

இலச்சியப் பகுதி:

## திருப்பூவண நாத ருலா

[ க. கி. ந. ]

I

தமிழ்மொழியிலுள்ள கோவை முதலாம் 96 பிரபந்த வகைகளுள் உலாவும் ஒன்ருகும். தலைவனெருவன் பேதை (ஐந்தாம் ஆண்டு முதல் ஏழாம் ஆண்டளவும் உள்ளவள்) பெதும்பை (8 - 11) மங்கை (12 - 13) மடந்தை (14 - 19) அரிவை (20 – 25) தெரிவை (26 – 31) பேரிளம் பெண் (32 - 40) எனப்படும் ஏழுபருவ மாதர்களும் தன்னைக்கண்டு காதல்கூர வீதியிற் பவனி போந்தானெனக் கூறப்பட வேண்டுமென்பதும் அது கலிவெண்பாவாற் பாடப்பட வேண்டுமென்பதும் இந்நூலுக்குரிய விதிகள். இவற்றுள் மாதருடைய ஒவ்வொரு பருவத்தையும் வேறுபடுத்திக் கூறுவது கஷ்டமாகும். அதிலும் பெதும்பைப் பருவத்தை வருணிப்பது மிக்க கஷ்டமென்ப. "பேசுமுலாவிற் பெதும்பை புலி" என்னும் ஔவையார் வாக்கும் நோக்குக.

தமிழில் முதன்முதல் உலாப் பிரபந்தமாகச் செய்யப்பட்ட நூல் ஆதியுலா என ஊகிக்கக் கிடக்கின்றது. ஆதியுலா என்னும் பெயரும் அது பழையஉலாஎன்பதைவலியுறுத்தல் காண்க. இற்றைக்கு ஏறக்குறைய 1200 ஆண்டுகளுக்கு முன் இருந்தவரும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் ஆருயிர்த் தோழருமாகிய சேரமான் பெருமாணுயனராலே அருளிச் செய்யப்பட்ட இவ் வாதியுலா பதினொராந் திருமுறையுள் ஒன்ருக விளங்குவது எவரும் அறிந்ததே. இந்த உலாவைப் பின்பற்றியே பல உலா நூல்கள் எழுந்தன போலும். உலாக்களெல்லாம் பாடாண்டிணைத் துறை யெனப்படும் ஊரவர்பாற் றோன்றிய காமப்பகுதியின்பால் அடங்கும், தமிழில் உலா நூல்கள் வடமொழிநூல் வழக்கைப் பின்பற்றியே எழுந்தனவாகத் தெரிகிறது. மக்களைத் தலைவனுகக் கொண்டு பாடப்படும் உலாக்களைப் போலன்றி இறைவனைத் தலைவனுகக் கொண்டு பாடப்படும் உலாக்கள் காமங் கூறுவதென்று கடியப்படா. ஏனெனில், அவை பெற்ற சிற்றின்பத்தையே பேரின்பமாக்கும் பெற்றியன. இந்நூல்களுள் வரும் ஏழு பருவ மாதர்களையும் சிவனடித் தொழும்பு செய்யுந் திருத்தொண்டராகக் கொண்டு மகிழலாம்; நாம் இங்கு எடுத்துக் கொண்ட திருப்பூவணநாத ருலாவும் இத்தகைய தொன்றே என அறிக.

திருப்பூவணநாதருலா என்பது

"பூவண மதனிற் பொலிந்தினி
தருளித்
தூவண மேனி காட்டிய
தொன்மையும்"

என மணிவாசகப் பெருமானுற் குறிக்கப்பட்ட திருப்பூவணம் என்னும் ஸ்தலத்திற் கோயில்கொண்டெழுந்தருளிய சிவபெருமான்மீது பாடப்பெற்ற உலாநூலாகும். இந்த ஸ்தலம் பாண்டிநாட்டிலுள்ள தேவாரம் பெற்ற சிவஸ்தலங்கள் பதினுன்கனுள் ஒன்று. இத்தலத்தைப்பற்றிப் பாடப்பெற்ற புராணங்களும் உள. விநாயகர், உமாதேவியார், திருமால், திருமகள், பிரமன், அகஸ்தியர், காளி, சூரியன், திருஞசனர், தருமஞனர், மார்க்கண்டேயர், வசிஷ்டர், இந்திரன், சந்திரன், நளன், சாகரசனர், பொன்னனையாள் முதலியோர் இத்தலத்தில் வழிபட்டுப் பேறு பெற்றனர் என இத்தலத்தின் புராணங் கூறும். வைவை நதியிலுள்ள மணல்கள் சிவலிங்கங்களாகத் தமக்குத் தோற்றினமையின் திருஞானசம்பந்த சுவாமிகள் அவற்றை மிதித்தற்கு அஞ்சினரென்றும், ஆகவே அவரும் அவரோடு உடன்வந்த தொண்டர்களும் அக்கரையிலேயே நின்று தரிசிக்கக்கூடியதாக, சிவபிரான் திருநந்தி தேவரைச் சிறிது சாய்ந்திருக்கும் வண்ணம் பணித்தாரென்றும், அப்பணியை மேற்கொண்டு நந்திதேவர் அப்படியே சாய்ந்திருந்தாரென்றும் கூறப்படுகின்றது; புட்பவனநாதர் வண்ணத்தில் வரும்

"செப்புமூவர்சொற் றமிழ்த்துதிக்க
விருப்பொடு
வந்துவைவை மணற்சிவ லிங்கமென
மனத்தெணி
முன்புவட கரைக்கவர் நின்று
தமிழ் பாடுபொழு
தேயிடப மாமுதுகு சாயும்வகை
யேசெய்துமுன்
மூவர் தரிசிக்கமகிழ் நேசர்"

எனும் பகுதியும் இவ்வரலாற்றுக்கு அரண்செய்து நிற்றலைக் காணலாம்.

இவ்வுலா திருப்பூவைபுலா எனவும் பெயர் பெறும்; என்னை? திருப்பூவணம் திருப்பூவை என்னும் பெயராலும் அழைக்கப்படுமாகலின்.

இந்நூலை இயற்றியவர் திருப்பூவணம் கந்தசாமிப்புலவர் என்பவராவர். இவர் இவ்வுலாவின் கண்ணே, "மன்போசன் முத்து வடுகநா தேந்த்ரனருள், பொன் போலு மாடை புனைந்தருளி" (46) என்று கூறுவதனல், சிவகங்கை அரசராக இருந்த முத்து வடுகநாதர் காலத்தவரென்று கருதப்படுகின்ருர். இவர் திருவாப்பனூர்ப் புராணம் என ஒரு புராணமும் பாடியுள்ளார்.

"கனியினைப் பிழிந்து செந்தேன்
கண்டென வாப்ப னூர்கம்
பனிமதி மிலைந்த நாதன் பன்னரும்
புராணந் தன்னைப்
புனிதன்மெய்க் கந்தசாமிக் கவி
ஞன்பூ வணத்தான் பார்மேல்
இனிதெனப் புலவர்கூற வின்ற
மிழ்ப் புணர்த்தி னனே"

என்பது திருவாப்பனூர்ப் புராணப் பாயிரமாகும்.

"கனியினைப் பிழிந்து செந்தேன் கண்டென" என்று கூறிய அடைகளானே இவர்தம் பாடல்கள் இவர் காலத்திலேயே மிகவும் நன்கு மதிக்கப்பெற்றன என்பது தெளிவாகும். இவ்வுலா, மேற்குறித்த திருவாப்பனூர்ப்புராணம் என்னும் இவை மாத்திரமல்ல, திருப்புனவாயிற் புராணம் என்னும் மற்றொரு புராணமும், புட்வனநாதர் வண்ணமும், திருப்பூவண ஸ்தல வகுப்பு, தீர்த்த வகுப்பு என்னுமிவைகளும் இவரால் இயற்றப்பெற்றன என்ப. இவர் திருப்பூவணத்திலிருந்த பொன்னனையாள் எனனும் பெயரையுடைய ஓர் உருத்திர கணிகையின் புதல்வ

(தொடர்ச்சி ௫-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண்டைத் தமிழரின் சமயம்

திருமயிலை, திருவாளர், சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை

(முற்றொடர்)

கடவுளின் அருள் பல வடிவங்களாகப் பரிணமிக்கின்றது. இப்படிப் பலதிறப்பட விளங்கும் கருணைப் பெருக்கைத் தமிழர் பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி,கிரியாசக்தி,ஞானசக்தி என்று பெயரிட்டு வழங்குவர். சமயத்துறையில் ஈடுபடும் மாணவர்கள் இச்சக்திகளின் இலக்கணங்களை நன்கு தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இவ்விலக்கணங்களை அறிந்த பின்னரே யாம் கடவுளின சொரூபத்தை அறிய முடியும். பின்வரும் அருள் வாக்குகளை நோக்கவும்:-

'மெய்யருளாந் தாயுடன்
சென்றுபின் தாதையைக்கூடி'

'அவனருளாலே யவன்தாள்
வணங்கி'

இவ்வுலகில் நமக்குத் தாய்மார்கள் குழந்தைப் பருவத்தில் தந்தையைக்காட்டி அவர்மாட்டு விசுவாசம் உண்டாக்குவதுபோல் நமது உலக மாதாவாகிய உமாதேவியார் உலக காரணராகிய சிவபிரானுரை அடையும்வழியைக்காட்டியுபகரிக்கின்றனர்.

கடவுளின் அருட்சக்தி ஆன்மாக்களின் தகுதிக்கேற்பப் பல விதங்களாகத் தோற்றப்படுகின்றது. அது கருணைச் சொரூபமாக விளங்கும் போது அறக்கருணை யென்றும் உக்கிரச் சொரூபமாக வெளிப்படும் போது மறக்கருணையென்றுங் கூறுகின்றோம்.

உக்கிர சொரூபமும் நமது நன்மையைக் கோரியதே யாகும். தாய் தந்தையர் தங்கள் குழந்தைகளை நல்வழிப் படுத்தச் சில சமயங்களில் கோபக் குறியைக் காட்டுவது சகசம். இதமான வழிகளால் அவர்களைத் திருத்த முடியாது. கோபம் மாயை வயப்பட்டதும் கடவுளின் சொரூப நிலைக்கு உரியதன்றாயினும் கடவுளானவர் ஆன்மாக்களின தன்மைக் கேற்ப அவர்களைத் திருத்துதற் பொருட்டுக் கோபக் குறியுடன் இம் மாயாவுலகத்தில வெளிப்படுகின்றார். மறக்கருணை புரிய அவர் சக்தி அப்படி வெளிப்படும்போது அதற்குக் காளி யெனறு பெயர். காளி யென்றால் இருள் நிறமுடைய சக்தி யென்று பொருள். (தாமச சொரூபம்)

உருவமில்லாத கடவுள் அவரது தன்மையை நமக்குப் புலப்படுத்தி அவரை அடையும் வழியைத் தேடும் பொருட்டு ஓர் உருவத்தோடு விளங்குகின்றார். இப்படி அவர் எடுக்கும் உருவம் இருவகைத்து. ஒன்று சாந்தமூர்த்தம்; மற்றொன்று அகோர மூர்த்தம். அகோர மூர்த்தமும சாந்த மூர்த்தத்தை உள்ளடக்கிய தாகும். அது எளியரை வலியரிடமிருந்து மீட்டும் தாத்தது. எளியரை வாட்டும் வலியரைத் தண்டித்து எளியருக்கு அருள் சுரப்பதால் அவர்மாட்டுக் கருணை புரிவதாகும் ஆதலால் எளியவர் இவ்வுருவத்தைக் கருணையுடையதாகக் கருதியே வழிபடுவர். இத்தகைய உருவமே காளியாகும். காளிக்கு மகிடாசுர மர்த்தனி என்று பெயர். அதாவது மகிடாசுரன் என னும் கொடிய அசுரனைக் கொன்று அருள் புரிந்த சத்தியாகும். மகிடன் என்றால எருமை. எருமை அஞ்ஞானத்திறகு அறிகுறி. எருமை முகமுள்ள ஓர் அசுரன் முற்காலத்தில் இருந்தான். அவன் வன்மையில்லாத நற்குணமுள்ள தேவர்களை வருத்தினன். ஞான சொரூபியாகிய உலகமாதா அஞ்ஞான சொரூபமான மகிடாசுரனைக் கொன்றுதேவர்களைக் காப்பாற்றினள். அஞ்ஞானத்தில் மூழ்கிக் கிடந்த தேவர்களை ஞானிகளாககினள காளி என்பது நுட்பப் பொருள.

புராண கதைகள் உருவகப்பெருளாற சிறப்புற்றவை. கதை மூலமாகக் கடவுளின் அருட் பெருமையை நமது மனக் கண்ணில் பதியச் செய்யத்தக்கன. இம்மாயா உலகத்திற் றோன்றும் கடவுட் சத்தியின் பெருக்கம் சித்தறிவு கொண்டு ஆராயப்பட்டால் வேறொரு நுட்பப் பொருளைத் தருவதாயிருக்கு மென்பது ஒருதலை. எல்லா உலகத்தோற்றங்களையும் ஆத்மஞான சொரூபிகள் வேறு உட்பொருள் கூடியவைகளாகக் காண்பர்.

நற்குண நற்செய்கை யுடைய தேவர்களை வருத்திய அசுரனைப் பயமுறுத்த நமது உலகமாதா கொண்ட காளி மூர்த்தம் நுண்ணிய தத்துவப் பொருளை விளக்கக் கூடியது என்பது நன்கு புலப்பட்டமை காண்க. இந்நுண்ணிய பொருளை ஆராய்ச்சியாளர் அறிந்திலர். முன்னர்க் கூறியபடி சித்சம்பந்தமான விஷயங்களை யாம் வெளிப் பொருள் கொண்டு நிர்ணயிக்கக் கூடாது. மனிதர்களால் உண்டாக்கப்பட்ட சமயங்களுக்கே வெளிப்பாட்டு உண்டு. வெளிப்பகட்டு ஆராயச்சிக்கு நிற்காது. உண்மைச் சமயமோ ஆராய ஆராயத் தனது உட்கருததை வெளியிடும். சமயமானது பலதிறப்பட்ட மனிதர்களுக்கு உண்மையைப் போதிப்பதாகும். ஒருபடியி லுள்ள மனிதர்களுக்குப்பிடிக்காதசிலவிதிகளும் நியதிகளும் மற்றொரு படியிலுள்ளவர்களுககு உகந்ததாகும். எந்தத் தகுதி யுள்ளவர்களுக்கு அவை ஏற்றதோ அத்தகுதியினர் அவைகளை உவகையோடு ஏற்று அனுசரிப்பர். உலகாயதத்தில் மூழ்கிக் கிடக்கும் மனிதர்கள் சித்தறிவு கொண்டு ஆராயத்தக்க விஷயங்களை ஒருபோதும் உணரமாட்டார். மருந்து கசப்பா யிருந்தாலும் நோயைக் குணப்படுத்துவதில் சிறந்ததா யிருக்கும். கசப்பு மருந்தை முற்றிலும ஒத்ததாகும். காளியின தோற்றம். அவளுடையகருணை மூர்த்தமே உமாதேவியார். இரண்டு மூர்த்தங்களையும் ஒருங்கே ஆராய்ந்தா லருட்சததி இனன தென்பதை அறியலாம்.

—தொடரும்.

## முருகமூர்த்திகோவில் கொட்டுடை வட்டுக்கோட்டை

ஷை கோவிலுக்குப் பூசகர்தேவை:-

மணஞ் செய்தவராயும் தமிழ் சமஸ்கிருத மென்னும் இரு மொழிகளிலும் விற்பன்னராயும் குருப்பட்டம் பெற்றவராயு மிருக்கவேண்டும். திருப்திகரமான வேதனமளிக்கப்படும். ஒழுக்கம், கோயில் நிர்வாகம் முதலிய திறமைகளடங்கிய இரு நற்சாட்சிப்பத்திரங்கள் சமீபத்திற் பெற்றதாயிருக்கவேண்டும். விண்ணப்பங்கள் 25-8-43 க்குப் பிந்தாமல் முகாமையாளர் ம. அ. மயில்வாகனம் அவர்களிடம் சேரவேண்டும்.

முருகமூர்த்திகோவில்
தர்மசபைத் தலைவர்
மு. சபாரத்தினசிங்கம்

வட்டுக்கோட்டை.
21—7—43.
Mis 93 29&2.8.43.

# வேதாந்த தரிசனம்

(திரு. வ. கந்தையா, கொழும்பு வானொலியில் பேசியது)

(முற்றொடர்)

### அத்துவைதம்

இந்தியாவில் காணப்படும் மதங்களின் வேதாந்தமே பெரும்பாலரர் கொள்ளும் மதம்; அதிலும் சங்கரர் தழுவிய அத்துவைத வேதாந்தமே இந்தியாவின் பல பாகங்களிலும் பரவிப் பலராலும் கைக்கொள்ளப்படும் மதம் என்பது ஆராய்ச்சியாளர் கொள்கை.

அத்துவைதம் என்ற சொல்லுக்குப் பொருள் என்ன? அத்துவைதம் என்பது ஒரு சொல்லாக நமக்குத் தோன்றுகின்றது. உண்மையில் அது மூன்று சொற்களாலாயது. அவையாவன அ+துவி+இத. அ எதிர்மறையைக் குறிக்கும் இடைச்சொல். அல்ல என்பது பொருள். துவி=இரண்டு. இத=அறிவது. துவைதம் என்றால் இரண்டாய் அறியப்படுவது. அல்ல என்னும் பொருளில் வரும் அ என்னும் அவ்வியத்தை முதலில சேர்த்துவிட்டால் அத்துவைதம் என்ற சொல் 'இரண்டல்லவாய் அறியப்படுவது' என்ற பொருள் தரும்.

இரண்டாவன யாவை? இரண்டல்லவாய் நிற்பது யாது? இரண்டாவன உயிரும் கடவுளும். இரண்டல்லவாய், அஃதாவது ஒன்றாய், நிற்பது கடவுள். இரண்டாய், அஃதாவது உயிரும் கடவுளும் தனித்தனி உண்மைகளாய், நிற்பன என்று கொண்டவர் மாதவாசாரியர். இரண்டல்ல ஒன்றே என்று கொண்டவர்கள சங்கராசாரியர் இராமானுஜாசாரியர் ஆவர். கடவுளைப் பிரமம் என்ற பெயரால் வழங்கினர்.

இதுவரை இங்கு நான் பேசிய 5 இந்து தரிசனங்களில் பிழம்பையும் ஒரு உண்மைப் பொருளாகக் கொண்டு இந்திய முனிவர் ஆராய்ச்சி செய்ததைக்கணடோம். பிழம்பு என்றால் சடப்பொருள.

நையாயிகரும் வைசேடிகரும் முப்பொருள் கொண்டனர். முப்பொருள்களாவன உயிர், கடவுள், பிழம்பு. சாங்கியர் கடவுளைக் களைந்து, உயிர் பிழம்பு என்னும் இரண்டையும் புருஷன் பிரகிருதி என்ற பெயர்களால கொணடனர். யோகியர் உயிர் கடவுள பிழம்பு மூன்றையும் கொண்டனர். மீமாஞ்சகர் சாங்கியரைப்போலக் கடவுளை நீக்கி, உயிர் பிழமபு இரண்டையும் கொண்டனர். இவர்களைப்போலல்லாமல, வேதாந்திகள் (பிழம்பு) சடப்பொருளை முற்றாநீக்கி விடுதலைக் காண்க.

### பிழம்பு

நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம் ஆகிய ஐந்தும் பூதங்கள். நிலம் நீர் நெருப்பு காற்று நான்கும் பிழம்பு, சடப்பொருள. ஆகாயம பிழம்பு அன்று. ஆகாயததிற்கு உருவம் இலலை. ஆயினும, ஆகாயமும் சேர்ந்தே நாம் துய்க்கும் உலகப்பொருள்கள உள்ளன. பெரும்பான்மை பற்றி உயிர் நீங்கலாகிய உலகப் பொருள்கள் யாவையும் பிழம்பு என்கின்றோம். வேதாநதிகள் முப்பொருளகளாகிய உயிர், கடவுள் பிழம்பைக் கொள்ளாமல பிழம்பை அறவே நீக்கிவிட்டதன் காரணமென்ன?

பிழம்பு பொய்யா? பிழம்பு உண்மைப்பொருள் அல்லவா! நான் உண்ணும சோறு பொய்ப்பொருளா? [illegible] குடிக்கும தண்ணீர் பொய்ப்பொருளா! குடித்தலாகிய செயல் பொய்யா? சங்கரர் கேட்கின்றார் "நீர் நேற்றிரவு கனவில் பெருந்தாகமெடுத்துத் தண்ணீர் குடித்துத் தாகந்தணித்தீரே, விழித்தபொழுது அதனை உண்மை எனக் கொண்டீரா!" என்று. கனவில நான் நீர் குடித்ததைப் பொய் யெனத்தான் கொள்வேன். அவ்வாறு பொய்யெனக் கொள்வதும் பிழை என்கிறார் சங்கரர். கனவுலகில் தண்ணீர் குடித்தது உண்மை. இனி நனவில் இப்போது தண்ணீர் குடிக்கிறதும் உணமை. கனவு உலகில் நிகழ்வதை நனவுஉலகில் நின்று நோக்குவதே பிழை என்கிறார்.

இனி, இன்னுமொரு உலகில் நின்று பார்ப்பவனுக்கு நனவுலகும் வெறுந்தோற்றமாகின்றது. நாம் தியானத்தில் அமர்ந்திருக்கும் போது முதலில் மன உலகில் உலாவுகின்றோம். குரங்குபோல் ஓடுகின்ற மனத்தை அடக்கி அதனை உயிரின்கண் செலுத்தும்போது உலக இன்ப துன்பங்களின் நினைவு கூட இல்லாமல் இருக்கின்றோம். ஓர் இனிய புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கிறவனுக்கு வெளியில மழைபெய்கிறதுகூடத் தெரியாமலிருக்கிறதல்லவா? அதுபோலவே தியானத்தில இருக்கிறவனுக்கு வெளி உணர்வு ஒன்றும் இருப்பதில்லை. ஆனால் அவன் துயிலகின்றானா? இல்லை. அவனைப்போல விழிப்புடனிருப்பவன் உலகியலில் சுறுசுறுப்புடனிருப்பவர்களில காண முடியாது.

அப்படிப்பட்ட யோகிக்கு இக்கனவு உலகம் வெறுந்தோற்றம், ஆனால் பொய்யல்ல, என்கிறார் சங்கரர். தோற்றம் என்றால் எதிலிருந்து தோன்றியது? யார் தோற்றுவித்தார்? கடவுளிடத்து மாயை என்னும் ஓர் ஆற்றல், சக்தி உள்ளது. அந்த மாயாசக்தியைக் கொண்டே உலகத்தைத் தோற்றுவிக்கின்றார் கடவுள். பினதான் விரும்பியபொழுது உலகத்தை ஒடுக்குகின்றார். இது சங்கரர் கொள்கை.

கடவுள் மாயாசக்தியைக் கொண்டு உலகைத் தோற்றுவிக்கின்றார். என்றால் கடவுள் வேறு அவர் கொண்டு செலுத்தும் மாயையாகிய கருவிவேறு என்று பொருள்படும். அப்போது கடவுளுக்குப் புறம்பாய் வேறு ஒன்றுண்டு என்று கொள்ள வேண்டும். அஃது உண்மைப் பொருளும் ஆகவேண்டும். கடவுள் ஒன்றே உண்மைப்பொருள் என்னும் சங்கரர் கொள்கைக்கு மாறுபடும். இந்த யாவும் பிரமமே" (சர்வம் கலு இதம் பிரம்மம்) என்பது உபநிடதவாக்கியம் பிரமம்=கடவுள். கடவுளைவிட வேறொன்றுமில்லை என்பது இதன் கருத்து. இது சங்கரருக்கு ஆப்தவாக்கியம்.

கடவுளுக்கு மாயை வேறாகாமல் இருத்தல எங்ஙனம்? நெருப்புக்குச் சூடு எவ்வாறு ஒன்றாய் உள்ளதோ அவ்வாறே கடவுளுக்கும் மாயை உள்ளது. நெருப்பிலிருந்து சூட்டைப் பிரிக்கமுடியாது. அதுபோலவே கடவுளிலிருந்து மாயையையும் பிரிக்கமுடியாது. சூடு நெருப்புக்கு ஒரு குணம், அதுபோல கடவுளுக்கும மாயை ஒருகுணமா? என்று தார்க்கிகர் கேட்கலாம். ஆனால் சங்கரரைத் தர்க்கத்தில் வெல்ல முடியாது. மாயை கடவுளுக்கு ஒரு நித்தியகுணமல்ல என்கின்றார். தான் விரும்பியவேளை உலகைத் தோற்றுவிப்பார். விரும்பியவேளை ஒடுக்குவார். தோற்றுவித்தலும் ஒடுக்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவேதாசுவரோபநிடதம்

(திரு. ஐ. பொன்னையா, ஏழாலை)

## முதலாம் அத்தியாயம்

### முற்றொடர்

(ந) தே த்யாநயோகாநுகதா அபஸ்யந் தேவாத்மசக்திம் வகுணைர் நிகூடாம், ய: காரணாநி நிகிலாநி தாநி காலாத்மயுக்தாந் யதிதிஷ்டத்யேக:-

இ—ள். ஸ்வகுணை: நிகூடாம்-ஆன்மகுணங்களினால் மறைக்கப்பட்ட (பாசஞானம் பசுஞானங்களால் அறியமுடியாத), தேவாத்மஸக்திம்-தேவான்மசத்தி எனப்படும் பராசத்தியை, த்யாநயோகாநுகதா - தியானயோகத்துற்றவர்களாகிய, தே-அவர்கள் (வேதவித்துக்களாகிய முனிவர்கள்), அபஸ்யந்-கண்டார்கள், (அச்சத்தியையுடைய சத்தன் (முதல்வன்) யாவனெனில்) காலாத்ம யுக்தாநி- (மேல் மந்திரத்திற் பெறப்பட்ட) காலம் முதல் ஆன்மா இறுதியாகிய, காரணாநி நிகிலாநி தாநி-எல்லாக் காரணங்களையும் (காரணமென்று அவ்வம் மதவாதிகளாற் கூறப்பட்ட சடமும் சித்துமாகிய எல்லாவற்றையும்), அதிதிஷ்டதி - கடந்து நின்று செலுத்துகின்ற, ஏக:- ஒருவன், ய:- எவனோ, (ஸ ஏவ) அவனே.

கு—பு—க. சுவகுணம் என்பது ஆன்ம அறிவின் மேற்று, (இது நாராயண பாடியத்துட் கண்டது) முதல்வன் பாசஞானம் பசு ஞானங்களால் அறியப்படாதவன் என்றபடி. பாசஞானமாவது; "வேத சாத்திரம்" முதலிய சொற்பிரபஞ்சமும், முப்பத்தாறு தத்துவங்களாகிய பொருட்பிரபஞ்சமுமாகிய இருவகைப் பிரபஞ்சங்களின் வாயிலாய்த் தன்னறிவின்கண் ணிகழும் ஏகதேச ஞானம். பசுஞானமாவது: இவ்விருவகைப் பிரபஞ்சங்களும் தன்னின் வேறானவை யென்றும், தான் இவற்றின்மேலாய் நின்று இவற்றைத் தொழிற்படுத்துமியல்புடைய னென்றும் கண்டு நீங்கிய விடத்துத் தன்போதமுனைப்பாற் சடுதியில் நிகழும் ஞானம். தன்னறிவு நிகழ்தற்கிடமாகிய கருவி கரணங்களைவிட்டு நீங்கின் உயிர் கேவலத்திலழுந்தும். அன்றேல் மீண்டும் கருவி கரணங்களைச் சேருதலாகிய சகலத்தைச் சடுதியிலடையுமன்றித் தனித்து நிற்கமாட்டாது. அவ்வியல்புணர்த்தவே "சடுதியில் நிகழும் ஞானம் பசுஞான" மெனப்பட்டது. இவ்வாற்றால உயிர் சுதந்திர அறிவுடையதன்று என்பதும்; அவ்வியல்பே சுகதுக்கங்களில் அது அகப்பட்டு அல்லற்படுதற்கு ஏதுவாயது என்பதும் நன்கு பெறப்பட்டது. படவே "நான் (உயிர்) பிரமம் என்னும் எண்ணம் மயக்க உணர்வின் பயனு யொழிந்தமை காண்க. இத்திறமெல்லாம் புலப்படவே "ஆத்மபாவாத்" என்றும் "ஆத்மா அப்யநீஸ: ஸுகது:கஹேதோ:" என்று மேல்மந்திரம்வரை செய்துணர்த்திற்று.

இனி, அவ்வுயிரின் ஏகதேச ஞான மெனப்படும் சுட்டறிவு ஒன்றில் நிலைபெறுதலின்றி ஒன்றைவிட்டொன்றைப்பற்றிச் செல்லுமியல்புடையதாதலால் தோற்றநாச முடையதெனக் கண்டோம். அதனால் அறியப்படுவனயாவும் தனக்கு வேறாய்ச் சடமுமாய் அழிவெய்துமியல்புடையனவாம். அதிசூக்குமசித்தெனப்படும் முதல்வனே பெத்தம் முத்தியாகிய ஈரிடங்களிலும் உயிரைவிட்டுப் பிரிதலின்றி அந்தரியாமியாய் நின்று அவ்வுயிர் விடயங்களையறியும்படி காட்டிக்காணுமியல்புடையன். அது எதுபோலவெனில்; தூலமாகியகண்ணொளிவிடயங்களை யறியும்படி அதனினுஞ் சூக்குமமாகிய ஆன்மபோதம் அதனோடு கலந்துநின்று காட்டிக் காணுமியல்புபோல வென்க. காட்டுதலையன்றிக் காணுதல் ஏற்றுக்கெனின், கண்ணுக்கு விடயங்களைக் காட்டும் விளக்கொளி, கண்ணொளியினினலை நீக்குதவோடமையாது பொருளிலும்பட்டு அதனை மறைத்துநிற்கும் இருளையும் நீக்கினாலேயன்றிக் கண் அப்பொருளைக் காணமாட்டாது. அதுபோல உயிரறிவிற் கலந்துநின்றுணர்த்து மிறைவன் விடயங்களிலுங் கலந்துநின்றாலேயன்றி உயிர்விடயங்களைக் காணமாட்டாதாகலின் காட்டுதலுங் காணுதலுமாகிய இரண்டுபகாரங்களும் இன்றியமையாது வேண்டப்படு மென்பதுணர்க.

இனிக், கண் தனக்குக் காட்டாகநின்ற ஆன்மபோதத்தைக் காணமாட்டாமைபோல உயிரும் தனக்குக் காட்டாக நிற்கும் இறைவனை எவ்விடங்களிலும் தனக்கு வேறாகச் சுட்டிக் காணுமாறில்லை. "காட்டிய கண்ணே தனைக்காணா கண்ணுக்குக், காட்டாய வுள்ளத்தைக் கண்காணா-காட்டிய - உள்ளந்தனைக் காணாதுள்ளத்தின் கண்ணுப, கள்வனாலுள்ளத்திற் காண்" என்றது சிவஞானபோதம். (சிவஞானபோதம்-9-2-1)

அத்தகைய இறைவனை அவனருளாலல்லது காணலாகாமையின் "தியானயோகத் துற்றவர்களாய்த் தேவான்ம சத்தியைக்கண்டார்கள்" என்று கூறப்பட்டது. 'தேவான்ம சத்தி' என்றது திருவருள் வடிவாகிய பராசத்தியை-அது சுவேதாசுவதரம்-ஆம் அத்தியாயம். எட்டாம் மந்திரத்திற் பிற்பாதி "பராஸ்யஸ்க்திர் விவிதைவ ஸ்ரூயதே ஸ்வாபாவிகீ ஞானபலக்ரியா ச" என்றுரைத்தமையால் வலியுறுத்தப்படும். ஸ்வபாவம் என்பது ஆகந்துகத்திற்கு எதிர்மறையானது. அதாவது சொரூபத்தினும் வேறுபடாது எப்போதுமுள்ளது. எனவே தேவான்மசத்தி, என்பது அக்கினிக்குச் சூடுபோல முதல்வனுக்குக் குணமாயுள்ள ஞானசத்தியே என்பது பெறப்பட்டது. இவ்வியல்பு அம்மந்திரத்தின் பொருளுரைக்குங்கால் விளக்கப்படும். இவ்வுண்மையுணராது தேவான்மசத்தி யென்பது சடசத்தியாகிய பிரகிருதியென் றுரைத்தார் மதம்பொலியென்பதுணர்க.

இனிப், பாசஞான பசுஞானங்களுக்கெட்டாத இறைவனை அவனருளாலேயே காணவேண்டுமென்பதற்குச் சுருதிப்பிரமாணங்கள் காட்டுதும்:- கடவல்லி -உ-உ௩, முண்டகம்-௩-உ-௩- "பரமாத்மா சிரவணத்தினாலும் மனனத்தினாலும் நிதித்தியாசனத்தினாலும் அடையத் தக்கவனன்று. எவனை அவன் வேண்டுகின்றானோ (எவனுக்குத் தன்னருளைப் புரிகின்றானோ) அவனால் அடையத்தக்கவன். அவனுக்கு இந்தப் பரமாத்மா தன் சொரூபத்தைக் காட்டுகின்றான். சிரவணம் என்பது பாசஞானத்தையும், மனனம் என்பது பசு ஞானத்தையும் குறிக்கும்; தெளிதலறிவு எனப் பொருள்படும் நிதித்தியாசனத்தினும் தெளிவோனும், தெளிவும், தெளியப்படும் பொருளுமாகிய பேதம் (காண்பவன் காட்சி காட்சிப் பொருள் என்னும் திரிபுடி) காணப்படுதலால அதுவும் ஆன்மபோத முனைப்பிற்றேயாம் ... பின்பாற்பட்டதே.

# வேதாந்த தரிசனம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

குவித்தலும் அவருக்கு நித்திய தொழில்களுமல்ல. ஆங்காங்கு அவரின் விழைவைப் பொறுத்தன.

### இராமானுஜர்

சங்கரர் கொள்கையில் சிறிது வேற்றுமை கொண்டவர் இராமானுஜர். இராமானுஜாசாரியாரும் தென்னிந்தியர். இவரே விசிஷ்ட அத்துவைத மதத்தை உண்டாக்கியவர்.

---

முண்டகம்-௩-க-அ. "பரமாத்மா கண்களினாலும் வாக்கினாலும் ஏனைக் கருவி கரணங்களினாலும் அடையப்படுபவனல்லன். தவத்தினாலேனும் கிரியைகளினாலேனும் அவனை அடையமுடியாது. அவனது ஞானப்பிரசாதத்தினால் விசுத்தசத்துவமடைந்து தியானயோகமுற்று நிஷ்களவடிவினனான அவனைக் காண்கின்றான்"

சிவஞானபோதம்-கூம் சூத்திரம் "ஊனக்கண்பாச முணராப்பதியை ஞானக்கண்ணினிற் சிந்தைநாடி"

சிவஞானசித்தியார்-கூ-க. "பாச ஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே, நேசமொடு முள்ளத்தே நாடி"

திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தாண்டகம் "உயிராவணமிருந்துற்று நோக்கி யுள்ளக்கிழியி னுருவெழுதி, உயிராவணஞ் செய்திட்டுன்கைத் தந்தா லுணரப்படுவாரோ டொட்டி வாழ்தி, அயிராவணமேறாதானே றேறியமரர் நாடாளாதே யாரூராண்ட, அயிராவணமே யென்னம்மானே நின்னருட்கண்ணா னோக்காதாரல்லாதாரே"

(உன்னருணோக்கம் பெறாதார் உன்னைக் காணமாட்டார் என்றபடி)

திருவாசகம்- "இத்தந்திரத்திற் காண்டுமெனறிருந்தார்க் கத்தந்திரத்தினவ்வயினொளித்தும்" "அவனருளாலே யவன்றாள் வணங்கி" பெத்தம் முத்தியாகிய இரிடங்களிலும் உயிர் அவனைச் சுட்டிக்காணமாட்டாது என்பதை, "அன்றுந் திருவுருவங்காணதே யாட்பட்டேன் இன்றுந் திருவுருவங் காண்கிலேன்" என்னும் அம்மை திருவாக்காலறிக.

இம்மந்திரத்தின் குறிப்புப் பின்னும் வரும்.

இவரும் தன் கருத்துக்கேற்ப உபநிடதங்கள் பகவத்கீதை முதலிய நூல்களுக்கு உரைசெய்தவர். சங்கரரின்படி உலகம் வெறுந்தோற்றம். இதனை வடமொழியில் விவர்த்தம் என்பர். இராமனுஜரின்படி உலகம் தோற்றமல்ல உண்மையில். இந்த உண்மையில் எவ்வாறு வந்தது? கடவுளிடத்து அசித் என்னும் அறியாப்பொருள் உண்டு. அது திரிந்து வெளியாயதே உலகம். திரிதல்மாறுதல் பரிணாமம் அதனால் இராமானுஜர்வாதத்தைப் பரிணாமவாதம் என்று சொல்வதும் வழக்கு. இந்தப் பரிணாமவாதத்திற்கும் சாங்கியர் கூறும பரிணாமவாதத்திற்கும் வேற்றுமையுண்டு.

கடவுளில் அசித் என்னும் பொருள் என்றுமுள்ளது. அஃது அவருக்கு ஒரு நித்தியகுணம். எப்போதும் உள்ள தொடர்புடையது.

### உயிர்

இனி உயிர். உயிர் ஒன்றோ பலவோ? ஒன்றுதான், பலவல்ல. மக்கள் விலங்கு முதலியன பல. ஒவ்வொரு உடலிலும் ஒவ்வொரு உயிர் உண்டுஎன்று நாம் நினைக்கின்றோம். ஆனால் உபநிடதம முதலியன 'தத்துவம் அசி' அதுவே நீ என்று முழங்குகின்றன. அதன் பொருளென்ன? நீ என்று சொல்வது நின் உடலை அல்ல, நின் உயிரை. நின் உயிரே கடவுள். உடல் வேறுபாட்டால் வேறாக மக்கள கருதினாலும் உயர்ஞானியர்க்கு உயிர் ஒன்றே என்றுதான் காணப்படுகிறது என்கிறார் சங்கரர். யோகநெறியில் முற்றியவனின் உயிர் இறுதியில் கடவுளாகின்றது. அதனால்தான் அதுவே நீ, அந்தக் கடவுளே அல்லது பிரமமே என்றார்கள். இதனால் நாம் அறியக்கிடப்பது நாம் ஒவ்வொருவரும் யோகநெறியைக் கடைப்பிடித்து 'நான் யார்' என்று உணர்வோமாகில் கடவுளெனக் காண்போம். இது சங்கரர் கொள்கை.

இனி இராமானுஜர் கொள்கை, கடவுளிலிருந்து 'சித்' அறிவது என்னும் பொருள், உலகமாய் மாறும்பொழுது, பல உயிராய் உடல்தோறும் உள்ளது. இறுதியில் அறியாமை நீங்க ஒவ்வொரு உயிரும் கடவுளைப் போல ஒளிருகின்றன. இவையே வேதாந்தத்தின் முக்கிய கொள்கைகள்.


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,36700**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறப்பர்.

Y 164 21-11-41—20-11-43 (தி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்கை முறையில் கருத்தரித்தல்

### மனித தரும நெறியில் எழும் பிரதான பிரச்னை

வெஸ்ட்மினிஸ்டர் யூலை 30—செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யும் முறைகள் சம்பந்தமாகவும் அவற்றிற்கும் மனித சமூக தர்ம நூல்களுக்குமிடையிலுள்ள தொடர்புகள் சம்பந்தமாகவும் இன்று பிரபுக்கள் சபையில பிரபேஸன் பிரபு பிரஸ்தாபித்தார்.

செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யும் முறைகளைத் தாம் கேட்டுத் திடுக்கிட்டதாகப் பிரபேஸன் பிரபு ஒப்புக்கொண்டுவிட்டு அவ்விஷயம் சம்பந்தமாக ஆழ்ந்த கவனம் செலுத்தவேண்டுமென்று கூறினர்.

கால்நடைகளுக்குச் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்வதற்காக ருஷியாவிற் பேராசிரியர் இவனேவ் நடத்திய விசேஷ பரிசீலனைகளைப்பற்றி பிரபேஸன் பிரபு சபையோருக்குக் கூறிவிட்டு இந்தச் செயற்கை முறையில் கால்நடைகள் அபிவிருத்தி செய்யப்பட்டால் அது இங்கிலாந்தின் விலையேறப்பெற்ற ஏற்றுமதிகளில் ஒன்றைப் பலமாகப் பாதிக்குமென்று கூறினர்.

பெண்களுக்கு

செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யும் பரிசோதனையைப் பெண்கள் விஷயத்திலும் பிரயோகிப்பதைப்பற்றிப் பிரபேஸன் பிரபு குறிப்பிடும்போது அமெரிக்காவில் இந்த முறையை அனுஷ்டிப்பதற்காக 10000 பெண்களிடமிருந்து விண்ணப்பப்பத்திரங்கள் கிடைத்திருப்பதாகக் கூறினர்.

குழந்தைகளில்லாத மனைவியரிடமிருந்து இதற்காகப் பெருந்தொகையான விண்ணப்பப்பத்திரங்கள் கிடைத்திருப்பதாகவும் குழந்தைகளை ஸ்வீகாரம் செய்துகொள்வதைவிட அவர்கள் இந்த நூதனமுறையை அதிகம் விரும்புவதாகவும இதனால சட்டம் தருமநெறி ஆகியவைகள் சம்பந்தமாக முக்கிய பிரச்னைகள் தலைகாட்டியிருப்பதாகவும் அவர் கூறினர்.

விவசாய மந்திரியின் கூட்டுக் காரியதரிசியான நோர்போக் பிரபு பதிலளிக்கையில் மனிதரைப்பற்றி இப்பிரச்னையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பகுதிக்குப் பதிலளிக்கத் தாம் உத்தேசக்கவில்லையென்று கூறிவிட்டு அந்தப் பிரச்னையைச் சுகாதார மந்திரி நுணுக்கமாகப் பரிசீலனைசெய்து வருவதாகவும், இங்கிலாந்தில் இப்பிரச்னை ஒருபிரதான பிரச்னையாக ஏற்படுங் காலத்தில் இதிலெழக்கூடிய சட்டப்பிரச்னைகளைப்பற்றித் தாம் சான்ஸலர் பிரபுவைக் கலந்து ஆலோசிப்பதாகவும் கூறினர்.

---

## பிரதோஷ விரத மான்மியம்

இடமின்மையால் இம்முறை வெளிவரவில்லை

---

## நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மகோற்சவம்

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில வருகிற வெள்ளிக்கிழமை (6-8-43) துவஜாரோகணமாகி மகோற்சவம நடைபெறும்.

---

## கள்ள ரூபாய் நோட்டுத் தயாரிக்கும் "லிதோ பிளேட்டு"கள்

### தனுஷ்கோடியில் ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது

இராமநாதபுரம் யூலை 24—தஞ்ஜை ஜில்லா ராஜகிரியைச் சேர்ந்த அப்துலஹமீது நேற்று இலங்கையிலிருந்து தனுஷ்கோடியில் வந்து இறங்கும்பொழுது அவன் கொண்டுவந்த சாமான்களைப் புகைரதப் பொலீஸார் சோதனைசெய்தனர். அவைகளில ஒரு ரூபாய்க'கரன்ஸி' நோட்டைக் கள்ளத்தனமாகத தயாரிக்க உதவும் இபதிஞற் செய்யப்பட்ட லிதோகிராபிக் பிரிண்டிங் பிளேட்டுகளை இருக்கக் கண்டனர். தனுஷ்கோடிப் புகைரதப்பொலிஸ் சப்-இனஸ்பெக்டர் எதிரி அப்துல் ஹமீதைக் கைது செய்து இன்று இங்கு கொண்டுவந்தார். தாலூகா நீதிபதி எதிரியை விளக்கமறியலில வைக்க உத்தரவிட்டிருக்கிறார். மேலும் புலன் விசாரணை நடந்து வருகிறது.

---

## திருப்பூவணநாதருலா

2ம் பக்கத் தொடர்ச்சி

ரெனக் கூறப்படுகின்றது. இந்நூலில், "பொன்னனையாள் பெற்றெடுத்த புத்திரனோர் நந்தசாமி" (சிறப்புப் பாயிரம்) எனவும் "எம் பொன்னனையாள்" (புலவர் கூற்கூற்ருக வருவது) எனவும் வரும் பகுதிகள் இக்கூற்றை வலியுறுத்துகின்றன.

இந்நூலின் நடை மிக இனிமை வாய்ந்தது; இடையிடையே சிலேடைகளையும் உடையது; பக்திச் சுவை நிரம்பியது; பாடிய புலவரின் சிவபக்தியும் அடியார் பக்தியும் தமிழ்ப் பற்றும் இந்நூலில் ஆங்காங்கே பொசிகின்றன. அன்றியும், இப்புலவர் சைவ புராணங்களிலும் தேவாரம் முதலிய சைவத் திருமுறைகளிலும், பழைய செய்யுட்களிலும் மிக்க பயிற்சியுடையவரென்பது இந்நூல் கொண்டு ஊகிக்கக்கிடக்கின்றது. இந்நூலினுள்ளே காணப்படும் நயமான சில பகுதிகளை ஒருசிறிது எடுத்துக் காட்டுதும்.

---

## புங்குடுதீவுக் கொலை வழக்கு விசாரணை

2-ம் பக்கத் தொடர்ச்சி

குனிந்துகொண்டு வந்தார். எதிரி பின்னால் வந்து விரித்தபடியிருந்த வில்லுக் கத்தியை மடியிலிருந்து எடுத்து ஓங்கி அவரது முதுகிற் குத்தினர். குத்துண்ட காலஞ்சென்றவர் சிறிதுதூரம் நடந்து போய்க் கீழே வீழ்ந்தார். அப்பால் எதிரி மிகவும் விரைவாக நடந்து தனது வீட்டுப்பக்கமாகப் போனர். குத்துப்பட்டதின்மேற் காலஞ்சென்றவர் ஐயோ எனக் குழறினர். அச் சத்தத்தைக்கேட்டு எனது மகன் கார்த்திகேசு அவ்விடம் வரக் காலஞ்சென்றவர் எங்களை விதானையைக் கூட்டி வரும்படி சொன்னர். சிறிது நேரத்தின்மேல் கார்த்திகேசு விதானை வீட்டுக்குப் போனன். அவ்விடத்திற்கு வல்லிபுரமும் காலஞ்சென்றவரது மனைவி செல்லம்மாவும் வந்தார்கள், வல்லிபுரம் சீலையாற் காயத்தைக் கட்டினர். இரத்தம் அதிகமாகப் பாய்ந்தது. செல்லம்மா தண்ணீர் பருக்கினள். அப்பால் ஒரு வண்டியில் காலஞ்சென்றவரை ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப் பட்டது. சிறிது நேரத்தில் இறந்து போனர். விசாரணை நடைபெறுகிறது.

---

## உடுவிற் கோவிற்பற்றில் சுகாதாரவாரம்

### இணுவிலில் பொருட்காட்சி

யூலை மாசம் 24-ந் திகதி பிற்பகல் 6 மணிக்கு, இலங்கை சுகாதார வைத்தியப்பகுதிப் பிரதம தலைவர் டக்டர் செலலப்பா அவர்கள் இணுவில் சைவமகாஜன வித்தியாசாலையில், உணவு, சுகாதார, கிருஷிக, கைத்தொழில ஆகாய விமானப் படைப்பாதுகாப்புப் பொருட்காட்சியொன்றைத திறந்து வைத்தார். இவ்வமயம் டக்டர் அவர்கள் உடுவிற் கோவிற்பற்றிலே சுகாதாரத் தொழில் மிகவும் திருப்திகரமாக முன்னேறி வருவதையிட்டுப் பாராட்டுமொழிகள் கூறினர். அதன்பின்னர், ஸ்ரீமான். சு. நடேசன் அவர்கள் தலைமையில் ஒரு பகிரங்கக்கூட்டம் நடைபெற்றது. அதில டக்டர். S. F. செல்லப்பா, வட இலங்கைச் சுகாதார வைத்தியர் டக்டர். S. C. துரைராசா, உதவிக் கிருஷிக உத்தியோகஸ்தர் ஸ்ரீமான் S. C. குணரத்தினம், வடமாகாண அதிபதி திரு. M. பிரசாத் முதலியோர் பேசினர். சினிமாப் படக்காட்சி அதன்பின்னர் நடைபெற்றது. அடுத்த நாள் பிற்பகல் உணவு வகைகள் உள்ளூர்த் தானியங்களிலிருந்து செய்யப்படும் முறைகள் ஸ்ரீமதிகள் N. S. இளையதம்பி அவர்களாலும் A. R. சுப்பிரமணியம் அவர்களாலும் காட்டப்பட்டன.

பெரியகோட்டு நீதிபதி ஸ்ரீமான். G. G. தம்பையா அவர்கள் தலைமையின்கீழ் ஒரு பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது. அதன்பின்னர் ஸ்ரீமதி. பரஞ்சோதி அம்மாள் இராசமாணிக்கம் அவர்களின் இன்னிசை விருந்து நடந்தது. திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் இலங்கை வித்தியாகர்த்தர் திரு. H. S. பெரேரா அவர்கள் ஆதரவில் ஒரு சுகாதாரக் கதம்பகச்சேரி நடந்தேறியது, அதன்பின்னர் உள்ளூர்த தானியங்களிலிருந்து உணவு வகைகள் செய்யும முறைகளும், ஆகாயப்படையெடுப்புப் பாதுகாப்பு முறைகளும், காட்டப்பட்டன. பகிரங்ககூட்டமும் பரிசளித்தலும் அன்றிரவு நடைபெற்றதுடன் சுகாதார விழாவும் முடிவெய்தியது.

—கடித

---

## தெஹிவலைச் சைவ சித்தாந்த மன்றம்

இம்மன்றத்தின் இரண்டாவது ஆண்டுவிழா தெஹிவளை புத்த வாலிபர்சங்கக கட்டடத்தில உயர்திரு. கருணையபாண்டியனூர் தலைமையின்கீழ் நடந்தேறியது. அவ்வமயம் திரு. சோம சரவணபவன் வரவேற்புக் கூறியபின் "மூவர்மொழி" என்பதுபற்றி முதலியார் S. பொன்னம்பலம் அவர்களும் "சேக்கிழாரும் பெரியபுராணமும்" என்பதுபற்றி தமிழ் அன்பன் S. சிவசம்பு அவர்களும் "சைவமும் தமிழும்" என்பது பற்றிப் பண்டிதர் A. சிற்றம்பலமும், "சைவசித்தாந்தம் என்பது பற்றிப் பண்டிதை பத்மாசனி இராஜேந்திராவும் "கடவுளும் நாங்களும்" என்பது பற்றித் திரு. A. V. மயிலவாகனம் அவர்களும் முறையே சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள். செல்வி விஜயலக்ஷ்மி கனகரத்தினமும் திரு. K. செல்லத்தம்பி, செல்வி. முத்துலக்ஷ்மி சங்கர ஐயர் முதலியோருடைய சங்கீதமும் சேர்ந்து அவ்வாண்டு விழா சிறப்பாய் நடந்தேறியது.

—கடித

---

## சுகாதார வாரக் கொண்டாட்டம் 1943

### யானையிறவு அரசினர் பாடசாலை

சுகாதாரக் காட்சிப் படங்களால் நன்கலங்கரிக்கப்பட்ட ஷ்டி பாடசாலை மண்டபத்துள்; கிளிநொச்சி சுகாதார பரிசோதகர் திரு. C. கதிர்காமசுவாமி அவர்களுடைய நன் முயற்சியின் பெறு பேருக; யானையிறவு உப்பளத் தலைவர் (Sup't. Saltern Elephantpass) திரு L. N. கிளாஸ் அவர்களின் அவைத் தலைமையின் கீழ், யானையிறவு, கிளிநொச்சி அரசினர் பாடசாலைகளின ஆசிரியர்களும், மாணவரும், தட்டுவங்கொட்டி சைவப் பாடசாலை ஆசிரியரும மாணவரும் சுகாதாரவார சம்பந்தமாகக் கூடித் தங்கள் தங்கள் திறமைகளைக் காட்டிச் சபையோரை மகிழ்வித்தனர். சுகாதாரப் பாக்களும், நடிப்புகளும் அவையோரை இன்புறுத்தியமை இவண் குறிக்கத்தக்கதாகும்.

கிளிநொச்சி அரசினர் வைத்திய சாலைத் தலைவர் (D. M. O.) திரு. R. அருணசலம் அவர்கள், "முதலுதவி"யைப்பீடிகையாகக்கொண்டு மிகச் சிறந்தனவும் அதிக நன்மைகளைப் பயக்கத் தகுந்தனவுமான விஷயங்களைக் கூறினர்.

A. R. P. Inspector - Kilinochchi திரு. N. சண்முகஇரத்தினம் அவர்கள், ஷ்டி D. M. O. அவர்களின் பேச்சைத் தமிழில் மொழிபெயர்த்துதவினர். மேற்படி D. M. O. அவர்கள், யானையிறவு அரசினர் பாடசாலைத் தற்போதைய தலைமை யாசிரியர் திரு. செ. கந்தையா அவர்களைப்பற்றிக் கூறிய புகழ் மொழிகளிவண் குறிப்பிடப்படின், மிகையாகும் என எண்ணி விடப்பட்டன.

கிளிநொச்சி அரசினர் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. S. அரசஇரத்தினம் அவர்கள், "மலேறியாவை" ப் பற்றி மிகத் திறம்பட, விளக்கமாகச் சபையோர் மெச்சும் வகையில் பேசியமை இவண் குறிப்பிடத் தக்கதாகும்.

சுகாதாரப்பரிசோதகரவர்களும், ஷ்டி பாடசாலைத் தலைமை யாசிரியரவர்களும, சபையாருக்கு நன்றி கூறியதும், மாணவர்க்குணவு அளிக்கப்பட்டுக் கொண்டாட்டம் நிறைவேறியது.

—கடித.

---

## உடுவில் க்ஷயரோக ஆஸ்பத்திரி

### நோயாளிகளுடன் ஊடாடியவர்களுக்கு இலவச வைத்திய சேவை

உடுவில் கோவிற்பற்றைச் சேர்ந்த க்ஷயரோகிகளையும் அவர்களுடன் சம்பந்தப்பட்டவர்களையும் பாதுகாக்கும் பொருட்டு, உடுவில் கிராமச்சங்க ஆதரவில் மருதனார் மடத்தில் க்ஷயரோக ஆஸ்பத்திரி ஒன்று திறக்கப்பட்டிருக்கிறது.

க்ஷயரோகிகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் மாதம் ஒருமுறை ஷ்டி ஆஸ்பத்திரிக்கு அழைத்து வரப்பட்டு யாழ்ப்பாணம் வைத்திய சுகாதார அதிகாரியினல் சோதனை செய்யப்படுவார்கள். அவர்களில் வறியவர்களுக்கு இலவசமாகப் பசுப்பால் மீன்எண்ணெய் மற்றும் அவசியமான மருந்துகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஊடாடுபவர்களில் நோயின் அறிகுறிகள் தென்பட்டால் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலுள்ள ஹிருதய நோய்ப்பகுதிக்கு எக்ஸ்றே பரிசோதனைக்காக அனுப்பப்படுகிறார்கள்.

இலங்கையிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்களில உடுவிற கிராமச் சங்கமே முதன்முதலாக இவ்வித க்ஷயரோக ஆஸ்பத்திரியைத திறந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜப்பானை வீழ்த்தப் பிரிட்டனின் உறுதி

### அந்நியநாட்டு மந்திரியின் வாக்குமதி

லண்டன் யூலை

சீன அந்நியநாட்டு மந்திரி டாக்டர் டி. வி. ஸூங்கிற்கு இன்றிரவு அளிக்கப்பட்ட விருந்தின்போது பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரி மிஸ்டர். அந்தோனி ஈடன் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

ஹிட்லரை வீழ்த்த நாம் உறுதி கொண்டிருப்பது போலவே, ஜப்பானையும் வீழ்த்த நாம் உறுதி கொண்டிருக்கிறோம், நமது லட்சியமும் நமது நேசநாடான சீனாவின் லட்சியமும் ஒன்றேயாகும். புனருத்தாரண வேலையில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் சீனாவோடு சேர்ந்து ஒத்துழைக்கும்.

டாக்டர். ஸூங் பதிலளிக்கையில் தரைப் போக்குவரத்துகளை மீண்டும் திறந்து சீனாவுக்கு அமோகமான உதவியளிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் அது கைவிடப்பட மாட்டாதென்று தாம் நம்புவதாகக் குறிப்பிட்டார்.

## இந்தியப் பத்திரிகாசிரியர்கள்

### பிரிட்டனுக்குச் செல்லும் யோசனை

வெஸ்ட்மினிஸ்டர், யூலை

இந்தியப் பத்திரிகாசிரியர்கள் அல்லது எல்லாக் கட்சிகளினதும் பிரதிநிதிகளான பொறுப்புவாய்ந்த எழுத்தாளர்கள் பிரிட்டனுக்கு விஜயம் செய்யவேண்டுமென்ற ஆலோசனையை இந்திய அரசாங்கம் பரிசிலனைசெய்து வருகிறதென்று மிஸ்டர். அமெரி கொம்மன்ஸ்சபையில கூறினர். அவர்கள் பிரிட்டனுக்கு வருவதில் அதிக கஷ்டங்களிருக்குமென்று தாம் அறிவதாயும் அவர் கூறினர்.

மேற்கு ஆபிரிக்காவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் இருந்து பத்திரிகாசிரியர்கள் பிரிட்டனுக்கு விஜயம் செய்திருப்பதால் அந்த இடங்களிலிருந்து வருவதைக்காட்டிலும் இந்தியாவிலிருந்து வருவது அதிக கஷ்டமாயிருக்குமா என்று மிஸ்டர். சொரென்ஸன் கேட்டார். மிஸ்டர். அமெரி குறித்த இரு இடங்களைக் காட்டிலும் இந்தியாவிலிருந்துபிரிட்டனுக்குக் கடல் மார்க்கமாக வருவது நீண்ட பயணமாகும். ஆகாய மார்க்கமாக வருவதற்கு விமான வசதி கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. இந்திய அரசாங்கம் தமது பரிசிலனையின் முடிவை எனக்குக் கட்டாயமாகத் தெரிவிப்பார்கள்.

## கடிதம்

இந்துசாதனப் பத்திரிகை ஆசிரியர் அவர்கட்கு:

ஐயாவே,

இக்கடிதத்தைத் தங்களது மேலான இந்துசாதனத்தில் பிரசுரிக்குமாறு தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறேம்.

கண்யமிக்க புண்யம் ததும்பும் சைவ சமயப் புண்ய சீலர்களுக்கு அறியத் தரும் வேண்டுகோள்.

ஐயன்மீர்! உலகத்தில் மானிடராய்ப் பிறப்பது அரிதினும் அரிது என்பது ஆன்றோர் கூற்று. அதிலும் மானிடராய்ப் பிறந்து "குஷ்டரோகம்" என்னும் இக் கொடிய நோயினுற் பீடிக்கப்பட்டு வாடும் ஏழைகள் கடைத்தேறும் வண்ணம், மட்டுநகர் நாவற்குடா வாசியான சபாபதி உடையார் எங்கட்கு ஆலயம் ஒன்றை உண்டுபண்ணி வைத்தார். இப்போது அவ்வாலயம் அழிந்து பாழாகுந் தன்மையில் இருப்பதாலும் ...தை எங்களால் சரிப்பணணப் பணம் ...ல்லாமையினுலும் இந்தருமத்தைக் கடைப்பிடித்து ஒழுகும் புண்ணிய சீலர்களாகிய தனவான்களே இதற்கு ஓர் உதவி செய்யுமாறு மிகவும் வணக்கமாகவும் மன்ருட்டமாகவும் தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேம்.

பணம் அனுப்பும் கனதனவான்கள் 'மெடிக்கல் ஒபிசர்', மாந்தீவு, மட்டக்களப்பு என்ற விலாசத்திற்கு எழுதிச் சைவசமய ஆலயம் சித்திரவேலாயுத சுவாமித் திருப்பணிக்கென்று குறித்து விடும்படி வேண்டிக் கொள்ளுகிறேம்.

இங்ஙனம்,

காரியதரிசி, செ. கதிராமப்பொடி.

ஐக்கிய இந்துசங்கம்,
மாந்தீவு, 21-7-43.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### செவ்வாய் ஆகஸ்ட் 3

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில்செய்திகள் 8 குழல் நாதஸிசை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே. கோமதி பாட்டு 9 ஒலிபரப்ப முடிவு.

1 கதம்பம் † 130 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஸெ. சரஸ்வதி ஷண்முகம் வீணை 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 எஸ். சரஸ்வதி ஷண்முகம் வீணை 5-45 இசைப்பயிற்சி 6 கோமதி 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7—45 நடந்தாய் வாழி காவேரி 8 கே. கே சுப்பிரமணிய ஐயர் † 9-15 ராம்துலாரி † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 கல்யாணி 10 இசைவேளை 10-30 ஒலிபரப்பு முடிவு.

### புதன் ஆகஸ்ட் 4

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்ய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8—30 எம். கே சூர்யாபாய் பாட்டு 9 ஒலிபரப்பு முடிவு.

1 சதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எம். கே. சூர்யாபாய் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2.30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 பல்லடம் கே. நாசராஜ ராவ் புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6 தஞ்சாவூர் கே கோபாலகிருஷ்ண பிள்ளை பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 தாளவாத்யக் கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 டாக்கி இசை 8 பல்லடம் கே. நாகராசராவ் புல்லாங்குழல் 8-30 அமெரிக்க வாத்ய 8-45 தஞ்சாவூர் கே. பாலகிருஷ்ண பிள்ளை பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஏழுதந்தி இசை 10 துருப்புகளுக்கு 10-30 ஒலிபரப்பு முடிவு.

### வியாழன் ஆகஸ்ட் 5

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழ் செய்திகள் 8 கம்பர் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எஸ். எஸ். பாசிவம் பிள்ளை பாட்டு 9 ஒலிபரப்பு முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 திருக்கோடிகாவல் ஆர் கிருஷ்ணமூர்த்திஐயர் வயலின் 2 தமிழ் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 திருக்கோடிகாவல் ஆர். கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 5-45 இசைப்பயிற்சி 6 எஸ் எஸ் பாமசிவம் பிள்ளை பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7.35 தமிழில் செய்திகள் 7-45 வானொலி வாத்யகோஷ்டி 8 கே. வெங்கிடாதரி பாகவதர் வீணை 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9.45 முன்னறைய சீனா 10 ஐரோப்பிய சங்கீதம் 10.30 ஒலிபரப்பு முடிவு.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 16861

வண்ணார்பண்ணை கிழக்கு (1) நல்லதம்பி முத்துவேலு கைம்பெண் பராசத்தியும் (2) முத்துவேலு சிவபாதசுந்தரமும் (இவர்கள் காலஞ்சென்ற நல்லதம்பி முத்துவேலுவின் உரிமைத் தத்துவகாரர்கள். தத்துவ கேஸ் நம்பர் 841.) வழக்காளிகள்

எதிராக

புங்குடுதீவு மேற்கு (1) டக்றர் M. கந்தசாமியும் (2) பொன்னையா நாகேசுவும் பெண் (3) செல்லம்மாவும்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 16861ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஆறுதுண்டுக் காணிகளை 1943ம் ௵ ஆவணிமீ˚ 21உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:. முதல் வட்டி ரூபா 3246.65ம் இதற்குத் தீர்வை **14.7.41** திகதி தொடக்கம் 100க்கு 9 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 248—91½

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடுதீவு கோவிற்பற்று புங்குடுதீவு மேற்கு இறை. சிறிய கொண்டல் பர நெல் இலா 46 குளி 10.ம் இதற்கு எல்லை கிழக்குக் கனகசபை பெண் அன்னம்மாவுக்கும் பிள்ளையார்கோவிலுக்கும் ஆறுமுகம் சரவணமுத்துவுக்கும் பங்காளருக்கும் தம்பையாபெண் இராமாசிப்பிள்ளையின் உரிமைக்காரர்களுக்கும் உரிய ஆதனம் வடக்கு காசிப்பிள்ளை பெண் அன்னலெட்சுமிக்கும் பங்காளருக்கும் பிள்ளையார் கோவிலுக்கும் குமாரசுவாமி ஐயர் இரத்தினசபாபதி ஐயருக்கும் பங்காளருக்கு முரிய ஆதனம். மேற்கு மூத்ததம்பி பசுபதிப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் சங்கரப்பிள்ளை மகள் அபிராமிப்பிள்ளைக்கும் அவவின் சகோதரங்களுக்கும் உரிய ஆதனம். தெற்கு ரேட்டும் பிள்ளையார்கோவிலுக்குமுரிய ஆதனம். இதிற்சொரியலாய் ¾ பங்கும்.

2 ஷை இறை பச்சைநீலி வளவு குஞ்சிப்பத்தர் வளவும் கணக்கன் வளவும் பர நி இலா 30ம் வான்பயிர்களும் எல்லை கிழக்கு ஆறுமுகம் சரவணமுத்துவுக்கும் பங்காளருக்கும் முத்துக்குமாரு கதிரவேலுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு சவுரிமுத்து ஆசீர்வாதத்துக்கும் பங்காளருக்கும் முத்துக்குமாரு கதிரவேலுப்பிள்ளைக்குமுரிய ஆதனம். மேற்கு இதிற் சொல்லிய மூன்றும் ஆதனமும் முத்துக்குமாரு கதிரவேலுப்பிள்ளைக்கும் தம்பையா பெண் இராசம்மாவுக்குமுரிய ஆதனம் தெற்கு ஆறுமுகம் சரவணமுத்துவுக்கும் சுப்பிரமணியம் பெண் இலட்சுமிக்கும் பங்காளருக்கும் ஆறுமுகம் பெண் பொன்னுவுக்கும் உரிய ஆதனம். இதிற் சொரியலாய் ¾ பங்கும்.

3 ஷை இறை கொ.ங்கழிக்கு கிழக்கு பர நெல் இலா 2ம் வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு மேற்சொல்லிய இரண்டாம் ஆதனம் வடக்கும் மேற்கும் தெற்கும் முத்துக்குமாரு கதிரவேலுப்பிள்ளைக்குரிய ஆதனம் இதடங்கலும்,

4 ஷை இறை சேர்ப்பனங்கரந்தலி, பர நி இலா 50க்கு எல்லை கிழக்கு வாய்க்கால் வடக்கு சின்னத்தம்பி கணபதிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு அருளம்பலம் பெண் பொன்னம்மாவுக்கும் பங்காளருக்கு முரிய ஆதனம். தெற்கு முருகேசு பெண் நல்லம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், இதிற் சொரியலாய் அரைவாசி.

5 ஷை இறை எழுவிவளவு பர நில இலா 8ம் வான்பயிர் செய்பயிர்களும் வீடும் எல்லை கிழக்கு பரநிருபசிங்கம் பொன்னம்மாவுக்கு முரிய ஆதனம் வடக்கு ரேட்டு மேற்கு கார்த்திகேசு ஆறுமுகத்துக்குரிய ஆதனம் தெற்கு ஒழுங்கையும் சவுரிமுத்து ஆசீர்வாதத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் இதிற் சொரியலாய் அரைவாசி.

6 ஷை இறை எழுவிவளவு பர நில இல 12ம் வான்பயிர்களும் கிணறும் எல்லை கிழக்கு சவிரியார் கோவிலாதனம் வடக்கு ரேட்டு மேற்கு பரநிருபசிங்கம் பெண் பொன்னம்மாவுக்கும் உரிய ஆதனம் தெற்கு இளையவன் பெண் நாகமுத்துவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் இதிற் சொரியலாய் அரைவாசி.

S. A. VANER,
கொமிஷனர்

புங்குடுதீவு
1943 ௵ ஆடிமீ˚ 20ந் திகதி
Mis 95 2—8—43.




**சிறுபிள்ளை வைத்தியத்திலும் ஏனைய வைத்தியங்களிலும் சித்திபெற்ற சில்லாலை முத்துவைத்தியசாலை**

சாதாரணமாகச் சிறுவர்களுக்கு வரும் கிரந்தி, சலதோஷம், வயிற்ரோட்டம், காய்ச்சல் முதலிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற அரிய பெரிய மருந்துகளும் நெடுநாட்பட்ட இருமல் மேகம் கிரந்தி வாதங்களை அகற்றும் அனுபவம் வாய்ந்த சிறந்த மருந்துகளும், எண்ணெய்வகைகளும் எம்மிடம் ஏராளமாயுண்டு. ஏழைகளையும் தனவந்தர்களையும் ஒரேசீராய் நடத்தும் அரசினரின் அங்கீகாரம் பெற்ற சில்லாலை முத்து வைத்தியர்.

அ. செபஸ்தியாம்பிள்ளை. பெரியதெரு, நம். 160, மேல்வீடு, யாழ்ப்பாணம்.
(Q. 30. 11-5.43—10-8.43)

**குறைந்த விலையில் துணிகள்**

ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்**

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம். **K. A. இரத்தினசிங்கம்,** பங்காளர்.

Y 19. 4-3-42——3-3-44


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday 2, August, 1943.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org